பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 23

முன்னுரை 26

- கட்டாயம் ஓதவேண்டிய ஸூறா / 27
- பல முறை ஓதவேண்டிய மகத்தான ஸூறா / 28
- ஸூறத்துல் ஃபாத்திஹாவின் பெயர்கள் / 29
- ஒளிச்சுடராக இறங்கிய ஸூறா / 30
- ஓதும்போதுள்ள மூன்று செயல்பாடுகள் / 32

முதல் வழிகாட்டல்: ஸூறத்துல் ஃபாத்திஹாவின் மூலம் நோய் நிவாரணம் பெறுவது 35

- போதுமான நிவாரணி / 35
- மனம் சம்பந்தப்பட்ட நோய்களின் நிவாரணி / 35
- உடல் நோய்களுக்கும் நிவாரணி / 37
- நிவாரணம் கிடைக்கும் வழி / 39
- உள்ளங்களின் இரண்டு வகை நோய்கள் / 40

இரண்டாம் வழிகாட்டல்: தவ்ஹீதும் அதன் வகைகளும் 44

- செயல்ரீதியான தவ்ஹீது / 46
- கல்விரீதியான தவ்ஹீது / 46

மூன்றாவது வழிகாட்டல்: அல்லாஹ்விற்கென்றே மனத்தூய்மையோடு வணக்கம் புரிவதும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றி நடப்பதும் 60

இரண்டு நிபந்தனைகளின் இறைவசனம் / 60

முதல் நிபந்தனைக்கான ஆதாரம் / 63

இக்லாஸ் எப்படிப்பட்டது? / 63

இரண்டாவது நிபந்தனைக்கான ஆதாரம் / 65

நான்காவது வழிகாட்டல்: நேரான பாதை 67

இறையச்சத்தின் விளக்கம் / 82

தவிர்க்க வேண்டியதைத் தெரிந்திருக்க வேண்டும் / 83

இணைவைப்பு குறித்து அறிய வேண்டும் / 84

ஐந்தாவது வழிகாட்டல்: அல்லாஹ்வுடைய பாதையைவிட்டும் வெளியேறுவது குறித்த எச்சரிக்கை 92

பெரும்பாவங்கள், சிறு பாவங்கள் / 97

பெரும்பாவங்கள் பற்றிய அறிவு முக்கியம் / 99

சுயவிசாரணை முக்கியம் / 103

பெரும்பாவங்களை விடுவதின் சிறப்பு / 104

தவ்பா கேட்க தாமதம் கூடாது / 107

ஆறாவது வழிகாட்டல்: மறுமைநாளை ஈமான்கொள்வது குறித்த விளக்கம் 111

அல்லாஹ் கூலி கொடுக்கும் நாள் / 112

நல்லோருக்கு அல்லாஹ் நற்கூலி கொடுப்பான் / 113

பாவிகளுக்குத் தண்டனை உண்டு / 114

மறுமை நெருங்கிக்கொண்டே இருக்கிறது / 117

விசாரணை தொடங்கும் முன்பு / 119

நரகத்தின்மீது சிராத் பாலம் / 121

மூன்று வகை மக்கள் / 122

மரணம் அறுக்கப்படும் / 125

மறுமை நம்பிக்கையின் முதல் படித்தரம் / 129

மறுமை நம்பிக்கையின் இரண்டாவது படித்தரம் / 130
அல்லாஹ்வையும் மறுமைநாளையும் / 132
மறுமையும் மண்ணறை வாழ்க்கையும் / 134

ஏழாவது வழிகாட்டல்: விதியை நம்பிக்கை கொள்வது 140
விதி மறுப்பது ஈமானை மறுப்பதாகும் / 140
விதியின் அடிப்படைக்கான ஆதாரங்கள் / 143
விதியை நம்புவது அல்லாஹ்வின்
ஆற்றலை நம்புவதாகும் / 145
விதியை நம்புவது அல்லாஹ்வின்
உதவியை நம்புவதாகும் / 148
விதியை நம்புவது அல்லாஹ்விடம்
நேர்வழியை நம்புவதாகும் / 148
விதியை நம்புவது நன்மையாகும் / 152
விதியைப்பற்றிய அறிவுக்கு இரண்டு வழிகள் / 154
விதியின் பெயரால் செயல்படாமல் இருக்கலாமா? / 162

எட்டாவது வழிகாட்டல்: பிரார்த்தனையின் சிறப்பு
குறித்த விளக்கம் 168
குர்ஆனின் தொடக்கமும் முடிவும் பிரார்த்தனையே / 168
வலியுறுத்திப் பிரார்த்திக்க வேண்டும் / 172
நபியவர்களின் முழு வாழ்க்கையும் பிரார்த்தனையே / 173
முதலாவது: மனத்தூய்மை / 176
இரண்டாவது: நபிவழி / 179
மூன்றாவது: பிடிவாதம் / 180
நான்காவது: வலியுறுத்தல் / 181
ஐந்தாவது: உள்ளம் விரும்புதல் / 182
ஆறாவது: வஸீலா / 183
அனுமதிக்கப்பட்ட வஸீலா / 183
தடுக்கப்பட்ட வஸீலா / 189
ஏழாவது: நபிவழியிலுள்ள ஆழமான சொற்கள் / 191

எட்டாவது: அச்சத்திலும் ஆசையிலும் கேட்டல் / 192
ஒன்பதாவது: சுத்தம் / 194
பத்தாவது: தவ்பா, இஸ்திங்ஃபார் / 194
துஆவின் ஒழுங்குகள், நிபந்தனைகள் / 195

ஒன்பதாவது வழிகாட்டல்: நேசம், பயம், ஆதரவு 200
தக்வாவின் இலக்கணம் / 200
அல்ஃபாத்திஹாவில் இம்மூன்று தன்மைகள் உள்ள விதம் / 203
நபிமார்களும் சொர்க்கத்தை வேண்டினார்கள் / 206

ﷺ ﷺ ﷺ ﷺ ﷺ

இந்த வடிவில் அறபுச் சித்திர எழுத்துகள் பல வாக்கியங்களின் நடுவே இந்நூலில் காணப்படும். இவை பிரார்த்தனைகளாகும். நல்லோர்களை நினைவுகூரும்போது அவர்களை வாழ்த்தக்கூடிய இஸ்லாமியப் பண்பாட்டைப் பின்பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றின் ஒலிபெயர்ப்பு மற்றும் பொருள் பின்வருமாறு:

ﷺ இது நபிகளாரின் பெயரை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' பொருள்: அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் அவர்கள்மீது உண்டாவதாக.

ﷺ இது நபித்தோழர்களின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலி பெயர்ப்பு: 'ரளியல்லாஹு அன்ஹு' பொருள்: அவர்மீது அல்லாஹ் திருப்தியடைவானாக.

ﷺ இது நபியின் மனைவிகள், தோழிகளின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ரளியல்லாஹு அன்ஹா' பொருள்: அவர்மீது அல்லாஹ் திருப்தியடைவானாக.

ﷺ இது நபிகளாருக்கு முந்திய தூதர்கள், நல்லோர்களின் பெயர்களை அடுத்து வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'அலைஹிஸ்ஸலாம்' பொருள்: அவர்களுக்குச் சாந்தி உண்டாவதாக.

ﷺ இது இறந்துவிட்ட அறிஞர்கள், பெரியோர்களின் பெயர்களுக்குப் பின்வரும். இதன் ஒலிபெயர்ப்பு: 'ரஹிமஹுல்லாஹ்' பொருள்: அவர்மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக.

றேன். அல்லாஹ்வின் அருளும் ஈடேற்றமும் நபியவர்கள்மீதும் அவர்களின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் அனைவர்மீதும் உண்டாவதாக.

கட்டாயம் ஓதவேண்டிய ஸூறா

ஸூறத்துல் ஃபாத்திஹா கண்ணியமிக்க குர்ஆன்[3] உடைய ஸூறாக்களில் மகத்துவமிக்க ஒரு ஸூறாவாகும். தினந்தோறும் ஐந்து வேளை ஃபர்ளு தொழுகைகளிலும் அதைத் தவறாமல் 17 முறை நாம் ஓதி வருகிறோம். ஏனென்றால், ஒவ்வொரு தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் அதை ஓதுவது கட்டாயமாகும். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

لاَ صَلاَةَ لِمَنْ لَمْ يَقْرَأْ بِفَاتِحَةِ الْكِتَابِ

பின்பற்றினார். இஸ்ரவேலர்களுக்கு இவ்வாறு எல்லாக் காலத்திலும் நபிமார்கள் இருந்தார்கள். ஒரு நபி இறந்தவுடன் இன்னொரு நபியை அச்சமூகத்தில் அல்லாஹ் ஏற்படுத்துவான். அவர் மூஸாவின் ஷரீஅத் மூலமே அம்மக்களை வழிநடத்துவார். இந்நிலையில் ஈஸாவுக்குப் புதிய ஷரீஅத் வழங்கப்பட்டது. அவர் நபி மட்டுமின்றி ரஸூலாகவும் வந்தார். மொத்தத்தில் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களில் முந்நூற்று பதிமூன்று பேர் ரஸூல்மார்கள் எனும் நபிமொழிப்படி ஒவ்வொரு ரஸூலும் நபிதான். ஆனால், ஒவ்வொரு நபியும் ரஸூல் அல்ல என்ற அடிப்படையைப் புரிய வேண்டும். முதல் நபி ஆதம். ஆனால், முதல் ரஸூல் நூஹ் என்பதிலிருந்தும் நபியின் தகுதியைவிட ரஸூலின் தகுதி உயர்ந்தது என்பதை உணரலாம். (ப.கு.)

3 குர்ஆன் (الْقُرْآن): மொழி வழக்கில் குர்ஆன் என்றால் ஓதப்படுவது, படிக்கப்படுவது அல்லது தொகுக்கப்பட்டது எனப் பொருள். மார்க்க வழக்கில் குர்ஆன் என்பது அல்லாஹ்வின் பேச்சு. அதை அவன் தன்னுடைய வானவர் ஜிப்ரீல் ﷺ வழியாக தன்னுடைய இறுதித்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் நெஞ்சத்தில் இறக்கினான். அவர்கள் நபியாக நியமிக்கப்பட்ட 40ஆம் வயதிலிருந்து அவர்கள் மரணித்த 63ஆம் வயது வரை சுமார் 23 வருடங்கள் அவர்களுக்கு குர்ஆனின் வசனங்கள் சிறுகச் சிறுக இறக்கப்பட்டன. அவை சிறிதும் பெரிதுமான 114 அத்தியாயங்களாக எழுதிப் பாதுகாக்கப்பட்டு தொகுக்கப்பட்டன. இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கும் சட்டங்களுக்கும் முதன்மை ஆதாரமான இதை முழு உலக மக்களுக்கும் நேர்வழியின் இறுதி வேதமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். (ப.கு.)

முதல் வழிகாட்டல்

ஸூறத்துல் ஃபாத்திஹாவின் மூலம் நோய் நிவாரணம் பெறுவது

✿

போதுமான நிவாரணி

ஸூறத்துல் ஃபாத்திஹா உடைய பெயர்களில் ஒன்று, அல்காஃபியத்துஷ் ஷாஃபிஈயா (اَلْكَافِيَةُ الشَّافِعَةُ) 'போதுமான நிவாரணம் அளிக்கக்கூடியது' என்பதாகும். உள்ளத்து நோய்களுக்கும் உடல் நோய்களுக்கும் ஸூறத்துல் ஃபாத்திஹாவில் நிவாரணம் இருக்கிறது. உள்ளத்தில் தீய நாட்டமும் தீய எண்ணம் ஏற்பட்டாலோ, மூகத்துதி ஏற்பட்டாலோ, பெருமை ஏற்பட்டாலோ, அடுத்தவர்களுக்கு அநியாயம் செய்யவும் குழப்பம் விளைவிக்கவும் எண்ணம் ஏற்பட்டாலோ, அதற்குரிய நிவாரணம் ஸூறத்துல் ஃபாத்திஹா என்ற நிவாரணிதான்.

மணம் சம்பந்தப்பட்ட நோய்களின் நிவாரணி

இப்னுல் கய்யிம்[5] ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: பெரும்பாலும்

5 இப்னுல் கய்யிம்: முஹம்மது இப்னு அபூபக்ர் என்பது இயற்பெயர். ஹிஜ்ரீ 691 (கி.பி. 1292) ஸஃபர் 7 அன்று டமாஸ்கஸில் பிறப்பு. ஏழு வயதிலிருந்தே அறிஞர்களின் சபைகளில் கல்வி தேடி அமர்ந்தார்கள். மார்க்க அறிஞராகிய தம் தந்தையிடமும், அக்காலத்தில் கல்விக்குப் பேர்போன சுமார் இருபத்தைந்து அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 712 (கி.பி. 1312) இல் இமாம் இப்னு தைமிய்யாவைச் சந்தித்து, அவர்கள் மரணித்த ஹிஜ்ரீ 728 வரை அவர்களுடனே தங்கியிருந்து கல்வி பெற்றார்கள். இமாம்கள் இப்னு கஸீர், இப்னு ரஜப் அல்ஹன்பலீ, அத்தஹபீ, இப்னு அப்துல் ஹாதீ, தகீய்யுத்தீன் அஸ்ஸுபுகீ ﵀ போன்றோர் இவரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வணக்க வழிபாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட இமாமவர்கள், ஹிஜ்ரீ 751 (கி.பி. 1350) ரஜப் 13இல் மரணித்தார்கள்.

இரண்டாம் வழிகாட்டல்

தவ்ஹீதும்[8] அதன் வகைகளும்

✿

ஸூறத்துல் ஃபாத்திஹா தவ்ஹீதுடைய மூன்று வகைகளை உள்ளடக்கியுள்ளது. இந்தத் தவ்ஹீது எனும் ஏகத்துவ வணக்க

8 இமாம் முஹம்மது ஸாலிஹ் அல்உஸைமீன் ﵀ கூறினார்கள்: அறபுமொழியில் தவ்ஹீது (تَوْحِيْدٌ) என்பது ஒரு பெயர்ச்சொல். வஹ்ஹத, யுவஹ்ஹிது (وَحَّدَ يُوَحِّدُ) எனும்வினைச்சொல்லின் வேர்ச்சொல். எதையேனும் ஒன்றாக்குதல் என்று அர்த்தம். ஒன்றை ஒருமைப்படுத்துதல் என்பது மறுத்தல், உறுதிப்படுத்துதல் இரண்டும் இல்லாமல் அமைய முடியாது. ஒரு பொருளை அது ஒன்றே என உறுதிப்படுத்த வேண்டுமானால், அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுக்க வேண்டும். உதாரணமாக, வணங்கப்படுவதற்கு அல்லாஹ்வைத் தவிர எதுவும் தகுதியானதில்லை என்று மனிதர்கள் சாட்சி கூற வேண்டும். இப்படிக் கூறினால் மட்டுமே தவ்ஹீதின் கருத்தை அவர்கள் முழுமையாக ஏற்றவர்களாக முடியும். இதன் மூலம் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் வணங்குவது மறுக்கப்படுகிறது; வணக்கங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே என்று உறுதிப்படுத்தப்படுகிறது. மறுத்தல் இல்லாமல் ஒன்றை உறுதிப்படுத்தினால், அது முழுமையான உறுதிப்படுத்தல் ஆகாது. மறுக்கப்பட வேண்டியவைக்கு அதில் பங்கிருப்பதற்குச் சாத்தியம் உண்டு. எதை உறுதிப்படுத்த வேண்டுமோ அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுத்தால்தான், உண்மையில் உறுதிப்படுத்துதல் அங்கு நிகழும். உதாரணமாக, 'இன்னார் நின்றுகொண்டிருக்கிறார்' என்று நீங்கள் கூறினால், உண்மையில் அவர் ஒருவர் மட்டுமே நிற்கிறார் என நீங்கள் உறுதிப்படுத்தியதாக ஆகாது. அந்த நிற்கும் செயலை அவர் மட்டுமே செய்கிறார் என்று வரையறை செய்யவில்லை. அவருடன் மற்றவரும் நின்றுகொண்டிருக்கலாம். 'எவரும் நிற்கவில்லை' எனக் கூறினாலோ, அனைத்தையும் மறுத்ததாக ஆகிவிடும். ஆனால், 'ஜைது தவிர யாரும் நிற்கவில்லை' என்று கூறினால், நிற்கும் செயலை ஜைதுக்கு ஒருமைப்படுத்திவிட்டீர்கள்; அவரைத் தவிர மற்றவர்களுக்கு மறுத்தும்விட்டீர்கள். தவ்ஹீதின் உண்மை நிலை இங்கு

மூன்றாவது வழிகாட்டல்

அல்லாஹ்விற்கென்றே மனத்தூய்மையோடு வணக்கம் புரிவதும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றி நடப்பதும்

✿

மேன்மை பொருந்திய இந்த ஸூறாவின் வழிகாட்டுதல்களில் உள்ள இன்னொரு விசயம், வணக்கவழிபாடு ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும் என்றால் இரண்டு நிபந்தனைகள் இருக்க வேண் டும் என்று இந்த அத்தியாயம் கூறுகிறது. ஒரு வணக்கவழிபாடு அது எதுவாக இருப்பினும் சரி, அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றால் அதற்கு இரண்டு நிபந் தனைகள் உண்டு. அவ்விரண்டும் இருந்தால் ஏற்கப்படும். அவை இல்லாவிட்டாலோ அல்லது அவ்விரண்டில் ஒன்று இல்லாவிட்டாலோ அது நிராகரிக்கப்பட்டுவிடும். அவை:

1. அல்லாஹ்வை மனத்தூய்மையோடு வணங்குவது

2. அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைப் பின்பற்றி நடப்பது.

இபாதத் செய்யக்கூடிய ஒருவனிடமிருந்து அல்லாஹ் அதை ஏற்க வேண்டும் என்றால் அவன் அல்லாஹ்விற்காக மட்டுமே அதை நிறைவேற்ற வேண்டும். மேலும், நபி ﷺ அவர்களின் ஸுன்னாவிற்குத் தோதுவாக நிறைவேற்ற வேண்டும். ஆகவே, வணக்கவழிபாட்டில் மனத்தூய்மையும் ரஸூல் ﷺ அவர் களைப் பின்பற்றி நடப்பதும் இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப் படும். மனத்தூய்மை இல்லாவிட்டாலோ நபியவர்களைப் பின்பற்றுதல் இல்லாவிட்டாலோ அது நிராகரிக்கப்பட்டுவிடும்.

இரண்டு நிபந்தனைகளின் இறைவசனம்

ஆகவேதான், அல்லாஹ் பின்வருமாறு கண்ணியமிகு குர்ஆ னில் கூறுகின்றான்.

கூடாது என்றும் அல்லாஹ்வுடைய நேரான பாதையை விட்டும் வெளியேறக் கூடாது என்றும் முழுமையான முறையில் பேராவல் கொள்வான்.

وَالَّذِينَ جَاهَدُوا فِينَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا وَإِنَّ اللَّهَ لَمَعَ الْمُحْسِنِينَ

எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயல்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய (நல்)வழிகளில் செலுத்துகின்றோம். நன்மை செய்பவர்களுடன் நிச்சயமாக அல்லாஹ் இருக்கின்றான். (குர்ஆன் 29:69)

பெரும்பாவங்கள், சிறு பாவங்கள்

அல்லாஹ் அடியார்களுக்குத் தடுத்துள்ள பாவங்கள் பெரும் பாவங்கள், சிறு பாவங்கள் என இரண்டு வகைப்படும்.

وَكُلُّ صَغِيرٍ وَكَبِيرٍ مُسْتَطَرٌ

சிறிதோ, பெரிதோ அனைத்துமே அதில் வரையப்பட்டிருக்கும். (குர்ஆன் 54:53)

அதாவது, அவனுடைய பாவங்கள் அவன்மீது எழுதப்பட்டிருக்கும். மறுமைநாளில் அவனுடைய பாவங்கள் நிரம்பிய தராசுகளில் அதை அவன் பார்க்க வேண்டும். ஆகவேதான், அல்லாஹ்தஆலா இன்னொரு வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்.

وَوُضِعَ الْكِتَابُ فَتَرَى الْمُجْرِمِينَ مُشْفِقِينَ مِمَّا فِيهِ وَيَقُولُونَ يَاوَيْلَتَنَا مَالِ هَذَا الْكِتَابِ لَا يُغَادِرُ صَغِيرَةً وَلَا كَبِيرَةً إِلَّا أَحْصَاهَا وَوَجَدُوا مَا عَمِلُوا حَاضِرًا وَلَا يَظْلِمُ رَبُّكَ أَحَدًا

(அவர்களுடைய தினசரிக் குறிப்புப்) புத்தகம் அவர்கள் முன் வைக்கப்பட்டால் குற்றவாளிகள் (தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும்) அதில் இருப்பதைக் கண்டு பயந்து, 'எங்களுடைய கேடே! இதென்ன புத்தகம்! (எங்களுடைய பாவங்கள்) சிறிதோ பெரிதோ ஒன்றையும் விடாது இதில் எழுதப்பட்டுள்ளதே' என்று அவர்கள் (புலம்பிக்) கூறுவதை நீர் காண்பீர். (நன்மையோ தீமையோ) அவர்கள் செய்த அனைத்தும் (அதில்) இருக்கக் காண்பார்கள். உம்முடைய

ஆறாவது வழிகாட்டல்

மறுமைநாளை ஈமான்கொள்வது குறித்த விளக்கம்

✿

மறுமைநாளை ஈமான்கொள்வது குறித்த விளக்கமும் இந்தப் பரக்கத் பொருந்திய அத்தியாயத்தின் வழிகாட்டல்களில் ஒன்றாகும். அந்த மகத்துவமான நாளில் மக்கள் அனைவரும் அகிலங்களின் இறைவனான அல்லாஹ்வுக்கு முன்னால் நிற்பார்கள். ஏனெனில், இவ்வுலக வாழ்வில் மக்கள் செய்த செயல்களுக்கு அந்நாளில்தான் அல்லாஹ் கூலிகொடுப் பான்.

لِيَجْزِيَ الَّذِينَ أَسَاءُوا بِمَا عَمِلُوا وَيَجْزِيَ الَّذِينَ أَحْسَنُوا بِالْحُسْنَىٰ

ஆகவே, தீமை செய்தவர்களுக்கு அவர்களுடைய (தீய) செயலுக்குத் தக்கவாறு (தீமையைக்) கூலியாகக் கொடுக் கின்றான். நன்மை செய்தவர்களுக்கு நன்மையைக் கூலியாகக் கொடுக்கின்றான். (குர்ஆன் 53:31)

ஆகவே, அல்ஃபாத்திஹா அத்தியாயம் மறுமைநாளை ஈமான்கொள்வதின் விளக்கமாகும். இந்த அத்தியாயத்தை மூஃமின்கள் இரவிலும் பகலிலும் திரும்பத்திரும்ப ஓதிவருவ தால் அவர்களுடைய உள்ளங்களில் மறுமைநாள் குறித்த நம்பிக்கை பதிந்துவிடுகிறது. இந்த அத்தியாயத்தில் அல்லாஹ் தன்னைப் பற்றிச் சொல்லும்போது, மாலிகி யவ்மித்தீன் - தீர்ப்புநாளின் அதிபதி என்பதாகக் கூறுகிறான். அதாவது, விசாரணை செய்யப்படுகிற, தண்டனை கொடுக்கப்படுகிற நாளின் அதிபதி என்பது பொருளாகும். தீர்ப்புநாள் என்ப தற்குத் தீனுடைய நாள் என்று இந்த அத்தியாயத்தில் சொல்லப் பட்டுள்ளது. இதற்குக் கூலி கொடுக்கப்படும் நாள் என்பது பொருளாகும். ஏனெனில், மக்கள் இவ்வுலக வாழ்வில் செய்த

என்ற வசனத்தின் பொருள் என்னவென்றால், நரக நெருப்பை மஹ்ஷர் மைதானத்திற்கு இழுத்துக்கொண்டு வரப்படும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

يُؤْتَى بِجَهَنَّمَ يَوْمَئِذٍ لَهَا سَبْعُونَ أَلْفَ زِمَامٍ، مَعَ كُلِّ زِمَامٍ سَبْعُونَ أَلْفَ مَلَكٍ يَجُرُّونَهَا

அன்றைய நாளில் நரகம் எழுபதாயிரம் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக்கொண்டு வரப்படும். ஒவ்வொரு சங்கிலியுடனும் எழுபதாயிரம் வானவர்கள் இருந்து, இழுத்து வருவார்கள். (அறிவிப்பு: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ, முஸ்லிம் 2842)

நரகம் அதற்கு உரியவர்களை நோக்கி உருமியவாறும் கர்ஜித்தவாறும் வரும். அல்லாஹ் எங்களையும் உங்களையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று வேண்டுவோம்.

நரகத்தின்மீது சிராத் பாலம்

பின்பு இந்த நரக நெருப்பின் மேல்பாகத்தில் சிராத் பாலத்தை நிறுத்தப்படும். அந்தச் சிராத் பாலம் முடியைவிட நுண்ணியது என்பதாக நபிமொழிகள் சிலவற்றில் வந்துள்ளது. அதைக் கடந்து செல்லுமாறு படைப்பினங்களிடம் கட்டளை பிறப்பிக்கப்படும். மக்கள் தங்கள் அமல்களுக்கு ஏற்ப முன் பின்னாக அதைக் கடந்து செல்வார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

الْمُؤْمِنُ عَلَيْهَا كَالطَّرْفِ وَكَالْبَرْقِ وَكَالرِّيحِ، وَكَأَجَاوِيدِ الخَيْلِ وَالرِّكَابِ، فَنَاجٍ مُسَلَّمٌ، وَنَاجٍ مَخْدُوشٌ، وَمَكْدُوسٌ فِي نَارِ جَهَنَّمَ

இறைநம்பிக்கையாளர் அந்தப் பாலத்தைக் கண்சிமிட்டலைப் போன்றும், மின்னலைப் போன்றும், காற்றைப் போன்றும், பந்தயக் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களைப் போன்றும் (விரைவாகக்) கடந்துவிடுவார். எந்தக் காயமுமின்றித் தப்பிவிடுவோரும் உண்டு. காயத்துடன் தப்புவோரும் உண்டு. மூர்ச்சையாகி நரக நெருப்பில் விழுவோரும் உண்டு. (அறிவிப்பு: அபூ ஸயீத் அல்குத்ரீ ﷺ, புகாரீ 7439)

ஆனால், இறைமறுப்பாளன் சிராத் பாலத்திற்குக்கொண்டு வரப்படும்போது அதன் நுனியில் நடந்து செல்வான். இறுதியாக

ஏழாவது வழிகாட்டல்

விதியை நம்பிக்கை கொள்வது

✿

ஈமானின் அடிப்படைகளில் ஒன்றான அல்லாஹ்வின் விதி களைக் குறித்த விளக்கமும் இந்த அத்தியாயத்தின் வழிகாட் டல்களில் ஒன்றாகும். ஈமானின் அடிப்படைகள் ஆறாகும். இறைவேதத்திலும் ஸுன்னாவிலும் அதுகுறித்து விளக்கப் பட்டுள்ளது. அந்த ஆறு அடிப்படைகளில் ஒன்றுதான் விதியை ஈமான்கொள்வது. அல்லாஹ் அனைத்துப் பொருட்கள்மீதும் சக்தி உள்ளவனாக இருக்கிறான் என்றும், அல்லாஹ் நாடி யதுதான் நடக்கும், அவன் நாடாதது நடக்காது என்றும், அனைத்துக் காரியங்களும் அவனுடைய திட்டப்படியும் ஆட்சியதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுமே நடக்கும்; அவனுடைய செயல்பாடுகளைத் தள்ளிப்போடுபவர் யாருமில்லை; அவ னுடைய விதியை மாற்றியமைப்பவர் யாருமில்லை என்றும் ஈமான்கொள்ள வேண்டும்.

விதி மறுப்பது ஈமானை மறுப்பதாகும்

இது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும். அடியான் இதை ஏற்காதவரை எந்த நற்செயலும் ஏற்கப்படாது. எந்த அமலுக் கும் பலன் கிடைக்காது. ஆகவேதான், விதியை மறுக்கிற ஒரு கூட்டத்தார் குறித்து இப்னு உமர் ﷺ அவர்களுக்குச் செய்தி கிடைத்தபோது பின்வருமாறு கூறினார்கள்:

فَإِذَا لَقِيتَ أُولَئِكَ فَأَخْبِرْهُمْ أَنِّي بَرِيءٌ مِنْهُمْ وَأَنَّهُمْ بُرَآءُ مِنِّي وَالَّذِي يَحْلِفُ بِهِ عَبْدُ اللَّهِ بْنُ عُمَرَ لَوْ أَنَّ لأَحَدِهِمْ مِثْلَ أُحُدٍ ذَهَبًا فَأَنْفَقَهُ مَا قَبِلَ اللَّهُ مِنْهُ حَتَّى يُؤْمِنَ بِالْقَدَرِ

‘அவர்களை நீங்கள் சந்தித்தால் அவர்களைவிட்டும் நான் பொறுப்பு நீங்கிக்கொண்டேன் என்றும், அவர்களும் என் னைவிட்டும் பொறுப்பு நீங்கிக்கொண்டார்கள் என்றும்

எட்டாவது வழிகாட்டல்

பிரார்த்தனையின் சிறப்பு குறித்த விளக்கம்

✿

பிரார்த்தனை செய்வதன் சிறப்பு அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் பலன்மிக்க, பரக்கத் பொருந்திய, மேன்மைமிக்க வழிகாட்டல்களில் ஒன்றாகும். எல்லா நேரத்திலும் ஒரு முஸ்லிம் பிரார்த்தனை செய்ய வேண்டிய கட்டாயத்திலும் முக்கியத்துவத்திலும் இருக்கிறான். பிரார்த்தனையின் ஒழுக்கங்கள், நிபந்தனைகள் குறித்து இந்த அத்தியாயத்தில் தெளிவான முறையில் விவரிக்கப்படுகிறது. பிரார்த்தனை செய்யக்கூடியவர் அந்த அழகிய பண்புகளையும் ஒழுக்கங்களையும் கடைப்பிடித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

குர்ஆனின் தொடக்கமும் முடிவும் பிரார்த்தனையே

பிரார்த்தனையின் உயர்வு என்னவென்றால், அல்லாஹ்விடத்தில் கெஞ்சிக் கேட்பதுதான். கண்ணியமிகு குர்ஆனில் அல்ஃபாத்திஹா அத்தியாயத்தில் அல்லாஹ்தஆலா துஆவைக் கொண்டு ஆரம்பித்து இறுதியில் அந்நாஸ் எனும் அத்தியாயத்தையும் துஆவைக்கொண்டே முடிக்கிறான்.

அல்லாஹ்வுடைய வேதத்திலும் நிறைய நபிமொழிகளிலும் பிரார்த்தனை செய்வதன் சிறப்பு குறித்துக் கூறப்பட்டிருப்பதை நோக்கும்போது அதனுடைய முக்கியத்துவமும் மேன்மையும் மிகத் தெளிவாகிறது. பிரார்த்தனை நன்மைகளின் முகவரியாகவும், வெற்றியின் அஸ்திவாரமாகவும், நற்பாக்கியத்தின் ஆரம்பமாகவும், இம்மை மற்றும் மறுமையின் எல்லா நற்காரியங்களுக்கும் திறவுகோலாகவும் இருக்கிறது.

وَقَالَ رَبُّكُمُ ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ إِنَّ الَّذِينَ يَسْتَكْبِرُونَ عَنْ عِبَادَتِي سَيَدْخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ